**லுணுகல பிரதேச சபை - 2022**

-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

லுணுகல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் லுணுகல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 869,805 ஆக இருந்த போதிலும் அது நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 1,062,661 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ரூபா 192,856 அதிகரித்து பதியப்பட்ட தவறு, திரண்ட நிதியத்தில் சீராக்கி சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டின் போது முற்செலுத்தப்பட்ட காப்புறுதி செலவினம் ரூபா 192,856 மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ரூபா 192,856 குறைத்து பதியப்பட்ட காப்புறுதி செலவினம், முற்செலுத்தப்பட்ட காப்புறுதி செலவினம் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமான பங்களிப்பு கணக்கில் சீராக்கி சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்படும். | - மேற்படி - |
| (இ) | முன்னைய ஆண்டில் செலவினக் கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 360,243 | கடன்கொடுத்தோராக பதியப்பட்ட ரூபா 360,243 தொகை நடைமுறைப் | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் போது தீர்க்கப்பட்ட போதிலும், நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்பாக காண்பிக்கப்பட்டிருந்தது. | பொறுப்பாக மீண்டும் பதியப்பட்ட தவறு செலவின மீதியில் குறைத்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஈ) | மீளாய்வாண்டிற்கான ஏனைய வருமான செலவினங்கள் ரூபா 15,585,603 ஆக இருக்க வேண்டிய போதிலும், அது ரூபா 14,082,735 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | செயற்பாட்டு வருமானச் செலவினம் ரூபா 1,502,868 குறைத்து பதியப்பட்டிருந்த தவறை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காகிதாதிகள் மற்றும் பழைய நீர் துணைப்பகங்களில் கையில் உள்ள இருப்பின் பெறுமதி ரூபா 1,440,864 ஆக இருந்ததுடன், நாளதுவரையாக்கப்படுகின்ற களஞ்சிய பேரேட்டு பேணப்படாமையினால் பெறுமதியை திருப்திகரமாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | முறையான களஞ்சிய பேரேடொன்றை பேணிச்செல்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | களஞ்சிய பேரேடு முறையாக நாளதுவரையாக பேணிச் செல்லப்படல் வேண்டும். |

### 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1980 இன் 47 ஆம் இலக்க சுற்றாடல் சட்டத்தின் 23(ஆ) | சபை மூலம் சேகரிக்கப்படுகின்ற கழிவுப் பொருட்கள் எரித்தல்/ அகற்றுவதற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | மத்திய சுற்றாடல் அதிகார சபையில் இருந்து சுற்றாடல் அனுமதிப் பத்திரம் கோரப்பட்ட போதும் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தில் காணப்பட்ட குறைபாடுகளினால் அனுமதி பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. அதனை சரிசெய்து மீண்டும் விண்ணப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தின் குறைபாடுகளை சரி செய்து சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெறப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1975 இன் 01 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று சமர்ப்பித்தல் சட்டத்தின் 02 ஆம் பந்தி | சபையின் 20 உறுப்பினர்களால் 2019 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை வருடாந்த சொத்துக்கள், பொறுப்புக்கள் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உறுப்பினர்களுக்கு இது தொடர்பாக அறிவிக்கப்பட்ட போதிலும், 2022 ஆம் ஆண்டிற்குரிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று ஜி. லோகநாதன் உறுப்பினரால் மாத்திரம் வழங்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் சகல உறுப்பினர்களும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருடாந்தம் சொத்துக்கள், பொறுப்புக்கள் கூற்றை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 13,972,065 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,101,431 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **வருமானமான மூலம்** | **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்** | **சிட்டையிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** | **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்** | **சிட்டையிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **(i)** | ஆதன வரியும் வரியும் | 1,082,800 | 1,180,110 | 717,725 | 462,385 | 255,500 | 256,701 | 169,256 | 87,445 |
| **(ii)** | வாடகை | 7,409,700 | 3,207,707 | 2,018,886 | 1,188,821 | 4,688,709 | 2,730,958 | 2,127,160 | 603,798 |
| **(iii)** | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,186,000 | - | 840,634 | (840,634) | 708,000 | - | 331,436 | (331,436) |
| **(iv)** | ஏனைய வருமானம் | 5,500,000 | 4,384,685 | 1,124,595 | 3,260,090 | 6,066,540 | 10,596,528 | 2,068,339 | 8,528,189 |
| | மொத்தம் | 15,178,500 | 8,772,502 | 4,701,840 | 4,070,662 | 11,718,749 | 13,584,187 | 4,696,191 | 8,887,996 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுப்பசளை செய்ய முடியாத கழிவுப் பொருட்கள் திறந்த நிலத்தில் அகற்ற முடியாதிருந்ததுடன், இயலுமானவரை மீள்சுழற்சி செய்யக்கூடிய பொருட்கள் வேறு பிரிக்கப்பட்டு மீள்சுழற்சிக்கு ஈடுபடுத்த வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், கழிவுப் பொருட்கள் நாளாந்தம் வேறு பிரிக்கப்பட்டதன் பின்னர் உக்காத கழிவுப் பொருட்கள் கணிசமான அளவு கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தின் சூழலில் திறந்த வெளியில் போடப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் நில குழியொன்றை தயாரித்து உக்காத கழிவுகளை அகற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | முறையான பிரகாரம் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபையினால் 2017 ஆம் ஆண்டின் போது வனப் பாதுகாப்பு திணைக்களத்திற்கு சொந்தமான சூரியகொட பிரதேசத்தில் அமைந்துள்ள காணியொன்றில் கழிவுப் பொருள் தளமொன்றை நிர்மாணிப்பதற்கு வாடகை அடிப்படையில் பெற்று அந்த காணியில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சின் நிதி ஏற்பாட்டில் ரூபா 6,383,675 செலவிடப்பட்டு இரண்டு கழிவுப் பொருள் தளங்கள், கூட்டுப்பசளை களஞ்சியப்படுத்தும் அறை மற்றும் கழிவுகளை அழிக்கும் இயந்திரம் என்பன கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்பட்டிருந்தது. மூன்றுசுற்று மின் இணைப்பை பெற்றுக்கொள்வதற்கு 2022 யூலை 06 ஆம் திகதி வரையும் நடவடிக்கை எடுக்காமையினால் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்ததுடன், சபை அதிகார பிரதேசத்தில் வருடாந்தம் சேகரிக்கப்படுகின்ற 42 டொன் அளவிலான கழிவுப் பொருட்கள் டெக்டர் வண்டி, கைவண்டி மற்றும் 09 ஊழியர்களை ஈடுபடுத்தி முறையற்றதாக குவித்து வைக்கப்பட்டிருந்தது. | LDSP செயற்திட்டத்தின் மூலம் மின்பிறப்பாக்கி இயந்திரம் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (இ) | தேசிய நீர் வழங்கல் அமைச்சின் நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத்தை விருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 180 மில்லியன் மற்றும் சபை நிதியத்தில் இருந்து ரூபா 59 மில்லியன் செலவில் லுணுகல நகரத்தில் நீர் செயற்திட்டத்தின் கீழ் சகல துணைப்பாகங்களையும் உள்ளடக்கிய நீர் மாதிரிகளை பரீட்சிக்கும் ஆய்வு கூடமொன்று மற்றும் பேரூந்து நிலையத்தில் மலசலகூட முறைமையை நிர்மாணித்து 2022 ஆம் ஆண்டின் போது சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. நீர் மாதிரிகளை பரீட்சிக்கும் ஆய்வு கூடத்தில் இரசாயன பொருட்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்ட போதிலும், ஆய்வு கூடத்தின் நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்கு தகைமை உடைய ஆய்வாளர் அல்லது உதவியாளர் சேர்த்துக் கொள்ளப்படாமையின் காரணமாக ஆய்வு கூடத்தில் நீர் மாதிரிகளை பரீட்சித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி ஆணையாளரின் 2023 மார்ச் 23 ஆம் திகதி 12/wp/10/cdlg/la-04 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் வேலையை கையேற்காமல் இருந்தமையால் ஆய்வு கூடத்தின் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது. | தகைமை உடைய உத்தியோகத்தரை சேர்த்து ஆய்வுகூடத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும். |